செ.வெ.எண்.13/ஆகஸ்ட் நாள் : 07.08.2018

# சிறுபான்மையினர் இன மாணவ, மாணவியர்களுக்கு மத்திய அரசின் கல்வி உதவித்தொகை

தமிழ்நாட்டில் அரசு, அரசு உதவிபெறும் மற்றும் மைய, மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் மைய அரசால் சிறுபான்மையினராக அறிவிக்கப்பட்டுள்ள இஸ்லாமியர், கிறித்தவர், சீக்கியர், புத்தமதத்தினர், பார்சி மற்றும் ஜைன மதத்தை சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு 2018-19 ஆம் ஆண்டிற்கு ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகையும், 11-ம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரை (ஐடிஐ, ஐடிசி, வாழ்க்கை தொழிற்கல்வி, பாலிடெக்னிக் , செவிலியர், ஆசிரியர் பட்டயப்படிப்பு, இளங்கலை, முதுகலை பட்டப்படிப்புகள் உட்பட) பயில்பவர்களுக்கு பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகையும் மற்றும் தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி பயில்பவர்களுக்கு தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பங்கள் மத்திய அரசின் www.scholarships.gov.in என்ற தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் ஆன்லைன் (Online) மூலம் வரவேற்கப்படுகின்றன.

இக்கல்வி உதவித்தொகை மாணவ, மாணவியர்களின் வங்கிக் கணக்கில் மத்திய அரசால் நேரடியாக செலுத்தப்படும். கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களை இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள்: 30.09.2018 ஆகும்.

மாணவ, மாணவியர்கள் அனைவரும் இணையதளத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் விடுபடாமல் பூர்த்தி செய்து விண்ணப்பத்தை படியிறக்கம் செய்து அதனுடன் மாணவரது புகைப்படம் மற்றும் தேவையான அனைத்து ஆவணங்களின் நகல்களை இணைத்து குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் கல்வி நிலையத்தில் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். ஆவண நகல்களை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பாத மாணவ, மாணவியர்களின் இணையதள விண்ணப்பங்கள் பரிசீலணைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

சாதி, வருமானம் மற்றும் இருப்பிடச்சான்றிதழ்

பெற்றோர், பாதுகாவலரின் ஆண்டு வருமான சான்றிதழ் வருவாய் வட்டாட்சியரிடமிருந்து மட்டுமே பெற்று கல்வி நிலையத்தில் தவறாது சமர்ப்பிக்க வேண்டும். மதம், சாதிக்கான சான்றிதழ் வருவாய்த்துறை வட்டாட்சியரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும் அல்லது சுயசான்றொப்பமிடப்பட்ட (Self Declaration) ரூ.10/- நீதிமன்றம் சாரா முத்திரைத்தாள் உறுதிமொழி படிவத்தில் (http://www.minorityaffairs.gov.in என்ற இணையதளத்தில் (SCHEMES/PERFORMANCE> Scholarshkp - Schemes> Pre- Matric – scholarship - Schemes) உள்ள படிவத்தில் மற்றும் இருப்பிட, உறைவிட சான்றிதழ் அவசியம் கல்வி நிலையத்தில் தவறாது சமர்ப்பிக்க வேண்டும்.

மைய அரசின் தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் (NSP) புதிய கல்வி நிலையங்களை இணைப்பதற்கு DISE/AISHE குறியீட்டு எண் அவசியமாகும். புதிய கல்வி நிலையங்கள் NSP இணையதளத்தில் தங்களது கல்வி நிலையத்தின் அடிப்படை விவரங்களை உடன் பதிவு செய்ய தருமபுரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை தொடர்பு கொண்டு தங்களுக்கான பயனாளர் குறியீட்டு (Login/Password) விவரங்களை உடனடியாக பெற்றுகொள்ள வேண்டும். மேலும் NSP இணையதளத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள கல்வி நிலையங்களின் தொலைபேசி எண்கள் அல்லது பாடப்பிரிவில் மாற்றம் இருப்பின் உடன் திருத்தம் செய்து கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது. புதியதாக விண்ணப்பிக்கும் மாணவ, மாணவிகள் இணையதளத்தில் எளிதாக விண்ணப்பிக்கும் வகையில் அனைத்து கல்வி நிலையங்களும் தங்களுடைய DISE/AISHE குறியீட்டு எண்ணை மாணவ, மாணவியர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

மேற்படி கல்வி உதவித்தொகை பெறுவதற்கான தகுதிகள், ஆன்லைனில் விண்ணப்பிக்கும் முறை மற்றும் தேவையான, இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் இதர நிபந்தனைகள் அடங்கிய விரிவான விளம்பரங்கள் http:/www.bembems.tn.gov.in/ welfschemes_minorities.htm என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டம் தொடர்பான மைய அரசால் வெளியிடப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகள் http:/www.minorityaffairs.gov.in/schemesperformance/scholarship-schemes என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் அமைந்துள்ள தருமபுரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை தொடர்பு கொள்ளலாம்.

தருமபுரி மாவட்டத்திலுள்ள சிறுபான்மையினர் மாணவ, மாணவியர்கள் மேற்படி கல்வி உதவித்தொகை பெற உரிய காலத்தில் ஆன்லைன் மூலம் விண்ணப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**